வாழிய செந்தமிழ்

# சுதேசமித்திரன்

வாழ்க நற்றமிழர்

Vol: XXIII ] நந்தனஸ்ரீ ஆனிமீ 23உ ★ 1952ஸ்ரீ ஜுலைமீ 6உ [No 23

## வரி உயர்வு தவிர வழியில்லையா ?

மக்கள் மீது இன்னும் வரிச் சுமை ஏறுகிறது. சர்க்கார் எதிர்பார்த்த அளவு வருமானம் கிடைக்கவில்லை; ஆனால் செலவு மட்டும் அதிகரித்துக் கொண்டிருக்கிறது; இதன் பலன்தான் தற்போதைய வரி உயர்வு என்றார் சென்னை அஸெம்பிளியில் வரவு செலவுத் திட்டத்தை சமர்ப்பித்த நிதி மந்திரி. சென்ற மார்ச் மாதத்தில் தயாரான இடைக்காலத் திட்டத்தின்படி துண்டு விழுந்த தொகை 86–லட்ச ரூபாய். ஆனால் தற்போதைய திட்டத்தில் காணும் துண்டோ 359–லட்ச ரூபாய். இடைக்காலத்தில் ஏற்பட்ட அனுபவத்தின்மூலம் வருமான மதிப்பீடு குறைந்தது மட்டுமில்லை; பல இனங்களில் செலவும் ஏறிவிட்டது. வருமானக் குறைவில் ஒரு பெரும் பகுதி விற்பனை வரி இனத்தைப்பற்றியது. விலைவாசிகள் இறக்கத்தையும், வர்த்தக மந்தத்தையும் தொடர்ந்து மேற்குறித்த இனத்தில் சர்க்கார் வருமானம் குறைவது இயற்கை. மேலும் உணவு உற்பத்திப் பெருக்குக்கென்று மத்திய சர்க்கார் இம்மாகாணத்துக்கு இது வரை கொடுத்துவந்த மான்யத்தை திடீரென்று விசேஷமாகக் குறைத்துவிட்டார்கள்.

இதே சமயத்தில் நம் சர்க்காரின் செலவுப் பொறுப்பு பல இனங்களில் அதிகரித்துவிட்டது. பஞ்ச நிவாரண நடவடிக்கைகளுக்கு மட்டும் முக்கால் கோடி ரூபாய் அதிகப்படியாக ஒதுக்க நேர்ந்திருக்கிறது. மொத்தத்தில் இந்த இனம் விழுங்க விருப்பது 6–கோடி ரூபாய் என்பது குறிப்பிடத்தக்கது. 300–ரூபாய்க்குக் குறைந்த சம்பளம் வாங்கும் கஜட் பதிவில்லாத உத்தியோகஸ்தர்கள், ஸ்தல ஸ்தாபன ஊழியர்கள், சர்க்கார் கிராண்டு பெறும் தனிப்பட்ட பள்ளிக்கூடங்களின் ஆசிரியர்கள் இவர்களது குழந்தைகளுக்கு கல்வி விஷயத்தில் சர்க்கார் அளித்துள்ள சலுகை கணிசமானது. இவ்வகையில் அவர்கள் 50–லட்ச ரூபாய் ஒதுக்கி வைத்திருக்கின்றனர். இன்னும் அதிகப்படியாகவும் செலவாகலாம். அதோடு கஜட் பதிவில்லாத உத்தியோகஸ்தர்களுக்கும், ஸ்தல ஸ்தாபன அதிகாரிகளுக்கும் இலவசமாக எல்லா வகையான வைத்திய வசதிகளும் அளிக்க சர்க்கார் உத்தேசித்திருப்பதை பொது மக்களில் எந்தத் தாப்பினரும் ஆட்சேபிப்பரென நாம் எண்ணவில்லை. பொதுவாக மாகாண க்ஷேமாபிவிருத்தியை முன்னிட்டு இந்த வரவு செலவுத் திட்டத்தில் குறித்த நீர்ப்பாசன அபிவிருத்தி போன்ற மூலதனச் செலவினங்களுக்கும் மக்களது அங்கீகாரம் கிடைப்பது திண்ணம்.

நிர்மாண வேலைகளுக்கான செலவினங்களில் எதையும் தவிர்ப்பதோ, குறைப்பதோ சாத்தியமென யாரும் வாதிக்க முடியாது. ஆனால் துண்டு விழும் தொகையை சரிக்கட்ட வரி உயர்வைத் தவிர வேறு வழியில்லையா என்பது வாக்குவாதத்

### பொருளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| வரி உயர்வு தவிர வழியில்லையா ? | | 2 |
| மீண்டும் சுரு வந்துவிட்டது ! | | 4 |
| காற்றுவாக்கிலே | கரூர் | 5 |
| குதர்க்கம் | தரளம் | 6 |
| வேலாயுதம் செய்தவேலை | வங்கத்தமிழன் | 7 |
| முதலாளி | சம்பந்தம் | 13 |
| நிரபராதி | சுகுமாரன் | 19 |
| சித்தி நல்லவள் | கே. வெங்கட்ராமன் | 23 |
| மனச்சாந்தி | பீ. வி. ஆர் | 27 |
| சாரணர் உலகம் | சித்தார்த்தன் | 30 |
| பெண்கள் உலகம் | குகப்ரியை | 31 |
| ஆடும் பூட்ஸ் | பிஇல் | 35 |
| விசித்திரலோகம் | சந்தனு | 38 |
| அனுபவ ரேகாசாஸ்திரம்-ரொமேஷ்கே. சாஸ்திரி | | 39 |
| நல்ல வேலை | சுவாமிநாதன் | 41 |
| ஹிந்தி உலகம் | பண்டிதஜி | 43 |
| ஈலை அழகி யார்? | | 45 |
| அ படியா சமாச்சாரம்! | எச். குருமூர்த்தி | 46 |
| கலா மண்டபம் | | 47 |


"மித்திரன்' வாரப்பதிப்பில் கதைகளில் வெளியாகும் பெயர்கள் சம்பவங்கள் எல்லாம் கற்பனையே அவை யாரையும் குறிப்பிடுவன அல்ல.